# ?????????????????? ??????? ??????? ????????????????????? ?????????????? ?????????????????? ??????????????




2009 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மாபெரும் இனப்படுகொலை இடம்பெற்று இன்றுடன் 14 ஆண்டுகள் ஆகி உள்ள நிலையில் தாயகம் மற்றும் உலகமெங்கிலும் உள்ள தமிழர்கள் போரில் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் பிரித்தானியாவிலும் புலம்பெயர் தமிழர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. அந்த வகையில் பிரித்தானிய தலைநகர் லண்டனில் உள்ள பிரதமரின் வாசஸ்தல முன்றலிலும் ஒக்ஸ்போர்ட் நகரில் உள்ள உலகத்தமிழர் வரலாற்று மையத்திலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்ச்சியுடன் இடம்பெற்றது.

இதில் குறிப்பாக இலங்கையில் யுத்தத்தின் போது இறந்தவர்களின் பெயர் விபரங்கள் செயற்பாட்டாளர்களினால் கணக்கெடுக்கப்பட்டன.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப்போர் 2009 ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்த நிலையிலும் இன்றுவரை யுத்தத்தால் கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்களோ பட்டியலோ யாரிடமும் இல்லை. இதனால் இறந்தவர்களை கணக்கெடுக்கும் செயற்திட்டத்தை சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டத்திற்கான அமைப்பு (ITJP) மற்றும் மனித உரிமைகள் தரவு ஆய்வுக்குழு (HRDAG) ஆகிய அமைப்புகள் இணைந்து முன்னெடுத்துவருகின்றன. இதன் மூலம் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை ஆவணப்படுத்தி சர்வதேச நீதிமன்றத்தில் சமர்ப்பித்து இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற அநீதியை சட்டரீதியாக நிரூபிக்க முடியும் என கூறப்படுகிறது.

இந்நிலையில் பிரித்தானிய பிரதமர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நிகழ்வில் இறந்தவர்களை கணக்கெடுக்கும் பணியை செயற்பாட்டாளர்களான சசிகரன் செல்வசுந்தரம், மனுமயூரன்

கிருபானந்த மனுநீதி, வாகீசன் விசாகரெட்னம், இராசரெட்னம் பிரசாந்த், ரகுநாதன் டினேஷ், அமல்ராஜ் ஜெயக்குமார், நிலக்ஷன் சிவலிங்கம், கஜானன் செல்வராசா, கனகசபாபதி கார்த்திகேஷன், கணேசலிங்கம் எபினேசர், பிரகலாதன் சிவகுருநாதன், சிவநாதன் டிலக்சன், ரோய் ஜாக்சன், வானுசன் தங்கவேலாயுதம், சர்வேந்தனி பேரின்பநாயகம் ஆகியோர் முன்னெடுத்திருந்தார்கள்.




அதேவேளை ஒக்ஸ்போர்ட்டில் உள்ள தமிழர் வரலாற்று மையத்தில் இடம் பெறும் நிகழ்வுகளை செயற்பாட்டாளர்களான விஜய் விவேகானந்தன், விதுரா விவேகானந்தன், டிலக்ஷன் மனோரஜன், பிரசன்னா பாலச்சந்திரன், கபிலன் அன்புரெத்தினம், பதிசன் பாலுராஜ், நாகராஜா லம்போதரன், புவனேந்திரன் சிவராம் துவாரகன், குமாரகுலசிங்கம், கனிஷ்டன் விமலதாசன், லக்ஷ்மன் திருஞானசம்பந்தர், சதேந்லொயிற்றன் புயலேந்திரன் ஆகியோர் முன்னெடுத்திருந்தனர்.




இறந்தவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விபரங்களை உடன் வழங்க முடியாதவர்கள் பின்னர் இணையத்தில் உள்ள இலத்திரன்கள் படிவம் மூலமாகவோ ([https://itjpsl.com/reports/counting-the-dead](https://itjpsl.com/reports/counting-the-dead)) அல்லது [itjpsl@gmail.com](mailto:itjpsl@gmail.com) , [countingthedead@gmail.com](mailto:countingthedead@gmail.com) info@hrdag.org ஆகிய மின்னஞ்சல் முகவரிகள் ஊடாகவோ அனுப்பி வைக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்படுகின்றது.

---

# [illegible]


10




முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் வடக்கு, கிழக்கில் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சார்பில் பிரித்தானிய பிரதமருக்கு மனு ஒன்று இன்றுகையளிக்கப்பட்டது

தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மாபெரும் இனப்படுகொலை இடம்பெற்று இன்றுடன் 14 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் தாயகம் மற்றும் உலகமெங்கிலுமுள்ள தமிழர்கள் போரில் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் பிரித்தானியாவிலும் புலம்பெயர் தமிழர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.அந்தவகையில் பிரித்தானியாவில் இடம்பெறும் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக பிரதமர் அலுவலகத்தில் மனுகையளிப்பு இடம்பெற்றுள்ளது.

இம் மனுவில் இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல்சவேந்திர சில்வா, முன்னாள் இலங்கை ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளை பின்பற்றி பிரித்தானிய அரசாங்கம் தடைவிதிக்க வேண்டும் எனவும், அனைத்து ஆதாரங்களும் சமர்பிக்கபட்ட பின்னரும் FDCO நடவடிக்கை எடுக்காமல் இருப்பது கணாமல் ஆக்கபட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்திற்கு ஏமாற்றத்தை தருவதாகவும் அத்துடன் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சகத்துடன் அண்மையில் பாதிக்கபட்ட தமிழர்களிற்கு சந்திப்பு ஒன்றினை ஏற்படுத்திதருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மனுவினை, மே 2009 இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவத்திடம் சரண்டைந்த பின் காணமல் ஆக்கபட்டவர்களான திரு பாலச்சந்திரன் சின்னத்தம்பியின் மனைவி திருமதி ரஞ்சனி பாலச்சந்திரன், திரு சுவமிநாதன் தயாசிறி குடும்பத்தின் உறவினர்ராகிய திரு லூக்காஸ் ஜோசப் செல்வநாதன், நல்லம்மா அருளானந்தம் அவர்களின் உறவினர் மரியமோட்சசலாக்கினி வரதராசா மற்றும் 1983ம் ஆண்டு காணமல் ஆக்கபட்ட திரு ரகுநாதன் தாமோதரம்பிள்ளையின் மனைவி ரஞ்சினிதேவி ரகுநாதன், 1996ம் ஆண்டு கணாமல் ஆக்கபட்ட நடராஜா கீதாரட்ணம் அவர்களின் உறவினர் திருமதி செல்வகுமாரி லோகநாதன், 1996ம் ஆண்டு கணாமல் ஆக்கபட்ட குமுதனி அவர்களின் உறவினர் திருமதி நித்தியகல்யாணி ஜெயகுமாரன் ஆகியோர் நேரடியாக பிரதமர் அலுவலகத்தில் கையளித்தனர்.


KEEP
TRANCE
CLEAR


10



இலங்கை அரசாங்கத்தினால் ஈழத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்டது மற்றம் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருப்பது இனப்படுகொலையே என்பதை பிரித்தானிய அரசாங்கம் உத்தியயோகபூர்வமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரதானமாக முன்வைத்து பிரித்தானிய பிரதமரிடம் இன்று மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

மாபெரும் இனப்படுகொலை அரங்கேறிய முள்ளிவாய்க்கால் 14 ஆண்டுகள் நினைவு தினமான இன்று, இனப்படுகொலையை தடுப்பதற்கும் மற்றும் தண்டிப்பதற்குமான சர்வதேச மையத்தின் **(ICPPG)** செயற்பாட்டாளர்களால் இலண்டன் 10 டவுனிங் வீதியில் அமைந்துள்ள பிரித்தானிய பிரதமர் வாசஸ்தலத்திலேயே மேற்படி மனு கையளிக்கப்பட்டது.

குறித்த மனுவில் சிறிலங்காவால் நிகழ்த்தப்படுது தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை என்பதை பிரித்தானியா பாராளுமன்றில் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றும் அவ்வாறு ஏற்றுக்கொள்வதற்கு தீர்ப்பாயமொன்று அவசியமெனில் அதனையும் உள்ளக ரீதியிலோ அல்லது ஏனைய


நாடுகளுடன் இணைந்தோ நிறுவவேண்டும் என்றும் குறிப்படப்பட்டுள்ளது.

மேலும், பிரித்தானியா புலம் பெயர் தமிழர்களின் இரண்டாவது வாழ்விடமாக திகழ்கின்ற போதிலும், இலங்கையில் தமிழின அழிப்பு இடம்பெற்றது என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்கான எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாமை கவலையளிக்கின்றது. அதை நிவர்த்தி செய்யும் வகையில், கடந்த 2021 இல் சீனாவின் உர்கர் மக்களுக்கு இனஅழிப்பு நடைபெற்றதை பிரித்தானியா முறையாக ஏற்றது போன்று, சிறிலங்காவின் தமிழின அழிப்பையும் பிரித்தானிய பாராளுமன்று ஏற்க வேண்டும்" என்றும் இந்த கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை கனடாவை தளமாக கொண்டு இயங்கும் தமிழின அழிப்பிற்கான நினைவாலயத்துடன் இணைந்து (Tamil Genocide Memorial, Canada) ICPPG பிரித்தானிய பிரதமரை நோக்கிய இணையவழி கையொப்ப போராட்டம் ஒன்றை முன்னரே ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ICPPG யின் செயற்பாட்டாளர்களான மநுமயூரன் கிருபானந்த மநுநீதி தலைமையில் நிலக்ஜன் சிவலிங்கம், ஜனனி செல்லத்துரை, தங்கவேலாயுதம் வானுசன், புகழினியன் விக்டர் விமலாசிங்கம் மற்றும் சிந்துஜா ஜெயன் ஆகியோரே பிரதமரிடம் மேற்படி மனுவினை கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


DOWNING
STREET SW1


10